# விலைக்கேள்விக்கான கோரல் - (IFB 2019/ 6)
# கல்வித் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண கல்வித் திணைக்கள **பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின்** தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding data & Contract Data** ( பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள், **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் (தொலைபேசி இல:- 021-224 2806 தொலைநகல் 021-224 1383)** என்னும் முகவரியில் தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 23.09.2019 முதல் 14.10.2019 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் ரூபா 15,000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.**
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி)**15.10.2019ம்** திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில்திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் என்னும்** முகவரியில் **07.10.2019** அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/B/KOICA/ KI/06(2019) | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு இல 1 | கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக்கட்டடம் (25.5m x18m), மற்றும் மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு நிர்மாணித்தல் | 61.43 | 245 நாட்கள் | C4 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 615,000.00 | 11.02.2020 **வரை** |
| | | கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அரச தமிழக் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (21m x 7.5m x2), விஞ்ஞான ஆய்வு கூடம்,கணனி ஆய்வு கூடம், பெண்கள் மலசலகூடம் இரண்டு மற்றும் மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல் | | | | | |
| | | கிளி/ கனகாம்பிகைக்குளம் அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (21m x 7.5m x2), விஞ்ஞான ஆய்வு கூடம், மற்றும் மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல் | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| NP/B/KOICA /KI/07(2019) | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி சூழல் மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு இல 2 | கிளி/ சிவபாதகலையகம் அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் விஞ்ஞான ஆய்வு கூடம் (12m x 7.5m), மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு மற்றும் தற்காப்பு சுவர் உட்பட நிர்மாணித்தல்<br>கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் ஆரம்ப கற்கை வள நிலையம் (22.5m x 10.5 m x 2) நிர்மாணித்தல்<br>கிளி/ திரேசா பெண்கள் கல்லூரியில் வகுப்பறைக்கட்டடம் (27m x 21mx 2), மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு மற்றும் 5000 லீட்டர் நீர்த்தாங்கி உட்பட நிர்மாணித்தல் | 71.98 | 259 நாட்கள் | C4 அல்லது அதற்கு மேல்(கட்டடங் கள்) | 720,000.00 | 11.02.2020 **வரை** |
| NP/B/KOICA /KI/08(2019) | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி சூழல் மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு இல 3 | கிளி/சோரன்பற்று இலங்கை திருச்சபை தமிழக் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (18m x 9.9m) நிர்மாணித்தல்<br>கிளி/ இயக்கச்சி அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (21m x 7.5m x2) , விஞ்ஞான ஆய்வு கூடம், கணனி ஆய்வு கூடம், 2000 லீட்டர் நீர்த்தாங்கி,குழாய் பொருத்தும் வேலை மற்றும் மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல்<br>கிளி/ பளை இந்து ஆரம்ப வித்தியாலயம் 2000 லீட்டர் நீர்த்தாங்கி நிர்மாணித்தல் மற்றும் குழாய் பொருத்தும் வேலை<br>கிளி/ முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக்கட்டடம் (21m x 7.5m x2), விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், 2000 லீட்டர் நீர்த்தாங்கி , குழாய் பொருத்தும் வேலை மற்றும் மாதவிடாய் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல் | 52.11 | 238 நாட்கள் | C4 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 522,000.00 | 11.02.2020 **வரை** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| NP/B/KOICA /KI/09(2019) | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி சூழல் மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு இல 4 | கிளி/ கரியாலை நாகபடுவான் இல 2 அரச தமிழ்க் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (27m x 7.5m x2), விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், மற்றும் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல்<br>கிளி/ இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலையில் வகுப்பறைக்கட்டடம் (30m x 10.5m x2), விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், மற்றும் சுகாதாரப் பராமரிப்பு பிரிவு உட்பட நிர்மாணித்தல்<br>கிளி/ முழங்காவில் ஆரம்ப பாடசாலை செயற்பாட்டு அறை மற்றும் நூலகம் (22.5m x 10.5m) , 2000 லீட்டர் நீர்த்தாங்கி நிர்மாணித்தல் மற்றும் குழாய் பொருத்தும் வேலை | 67.10 | 252 நாட்கள் | C4 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 671,000.00 | 11.02.2020 **வரை** |

**தலைவர்,**
**பிரதம செயலாளர் பெறுகைக்குழு ,**
**கல்வித் திணைக்களம்**
**வடமாகாணம்**